**மாத்தளை பிரதேச சபையி - 2024**
**-----------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தளை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாத்தளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு

இந் நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 .நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட Sweep சேமிப்புக் கணக்கில் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்கான வட்டி வருமானம் ரூபா 183,962 ஆன வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்படவில்லை. | 2025 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்வதாக. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2024 மே 17 ஆந் திகதிய பொது நிர்வாகம், உள்துறை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் PL/16/1/6/Cpura) Gen – 4 ஆம் இலக்க கடிதத்தின் மூலம், புற நெகும திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட பலாபத்வெல பல்நோக்கு கட்டிடத்தின் மொத்தக் கிரயம் ரூபா 59,380,000 ஆக நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சேர்க்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கட்டிடத்தின் செலவினம் ரூபா 41,691,510 என ரூபா 17,688,490 தொகை குறைத்துக் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இதுபோன்ற குறைபாடுகள் ஏற்படாமல் இருக்க கவனமாக நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 178,960 பெறுமதியான நகல் இயந்திரம் மற்றும் அச்சுப்பொறி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்வதாக. | - மேற்படி - |
| (ஈ) | முன்னைய ஆண்டுகளில் கை தவிர்க்கப்பட்ட ரூபா 220,806 ஆன 02 இயந்திரங்கள் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 03 விடயங்களுக்குரிய மீதிகள் அவற்றிற்குரிய உப அட்டவணைகளுடன் ஒப்பிடும் போது மீதிகளுக்கு இடையே மொத்தம் ரூபா 283,076 ஆன வேறுபாடு ஒன்று இருந்தது. | பொருட் பதிவேட்டில் உள்ள பதிவுகள் சரியாகக் கண்டறியப்பட்டு 2025 நிதிக் கூற்றுக்களில் சரி செய்யப்படுவதாக. | கணக்கு மீதிகள், பெறுமதிகள் துணை ஆவணங்களில் உள்ள பெறுமதிகளுடன் ஒப்பிட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்**<br>128 ஆம் பிரிவு | சபையால் பயன்படுத்தப்பட்ட மொத்தம் ரூபா. 4,592,360 பெறுமதியான 22 காணித் துண்டுகளின் உரிமை கையேற்கப்படவில்லை. | கையேற்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென. | சபைக்குச் சொந்தமான காணிகளின் உரிமையை கையேற்க வேண்டும். |
| (ஆ) | **இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்**<br>நி.பி 571(3) | மொத்தம் ரூபா. 379,931 ஆன 2 முதல் 3 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலான காலாவதியான 06 வைப்பு மீதிகள் தீர்க்கப்படவில்லை. | அவற்றைத் தீர்க்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென. | காலாவதியான வைப்புத் தொகைகள் தீர்க்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 78,991,605 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 58,617,757 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,472,000 | 5,403,689 | 4,965,622 | 1,011,102 | 2,497,000 | 3,837,378 | 3,785,638 | 573,035 |
| (ii) | வாடகை | 1,200,000 | 1,318,737 | 1,296,587 | 45,650 | 1,200,000 | 1,156,212 | 1,151,152 | 23,500 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 3,175,000 | 2,131,531 | 2,217,558 | 144,945 | 3,275,000 | 1,903,783 | 1,726,853 | 230,972 |
| (iv) | ஏனைய வருமானம் | 628,751,100 | 105,044,012 | 106,034,937 | 111,891,362 | 581,194,300 | 106,622,390 | 43,719,598 | 112,882,287 |
| | | 635,598,100 | 113,897,969 | 114,514,704 | 113,093,059 | 588,166,300 | 113,519,763 | 50,383,241 | 113,709,794 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 994,094 ஆன வீதவரி நிலுவையொன்று காணப்பட்டது. அதில் வீதவரி அலகொன்றின் நிலுவை ரூபா 1,000 இற்கு மிகைத்த நிலுவையாக இருந்த 349 ஆதனங்களிலிருந்து ரூபா 687,053 ஆன நிலுவை வீதவரி மீதியொன்று 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவிள் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | நிலுவை வருமானங்கள் அறவிடப்பட வேண்டும். |

**(ஆ) மிகை அறவீடுகள்**

| | | |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளில் விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளில் மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 184,000 ஆன தொகை ஒன்று மேலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இத்தொகை இதுவரை அறவிடப்பட்டிருக்க வில்லை என்பதாக. | நிலுவை மிகை அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மடவல உல்பத நூலகக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் 2022 ஆம் ஆண்டு முதல் மீளய்வாண்டின் இறுதி திகதி வரை பல கட்டங்களின் கீழ் ரூபா. 7,308,844 செலவிடப்பட்டிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை சந்தர்ப்பத்தில், மீதமுள்ள நிர்மாணப் பணிகள் ரூபா 4,000,000 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்த காரணத்தினால் 2 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமொன்றை கடந்திருந்த போதும் நோக்கத்திற்குட்பட்ட செயற்பாட்டிற்காக பயன்படுத்த முடியவில்லை. | நிர்மாணப் பணிகள் எதிர்காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டு தொடர்புடைய நோக்கத்தை அடையப் பயன்படுத்தப்படுவதாக. | நிர்மாணப் பணிகள் உடனடியாக பூர்த்தி செய்து நோக்கத்திற்கு உட்பட்ட செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை, 05 சந்தர்ப்பங்களில் சபையின் காவலாளியின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட விதவை மற்றும் அனாதை பங்களிப்பு தொகை ரூபா. 186,381 ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் குறித்த நிதிக்கான பங்களிப்புகள் அனுப்பி வைக்கப்படும் என்பதாக. | உரிய வகையில் ஓய்வூதிய ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்கு பங்களிப்புகள் அனுப்பப்பட வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டு புற நெகும திட்டத்தின் மூலம் ரூபா 46,629,525 செலவில் நிர்மாணிக்கப்பட்டு சபையிடம் ஒப்படைக்கப்பட்ட கட்டிடத்தின் மேல் மாடி, கீழ் மாடி மற்றும் குழந்தை மற்றும் மகப்பேறு சிகிச்சைகள் நடைபெறும் பிரிவில் பல இடங்களில் சுவர்களில் விரிசல்கள் மற்றும் பிளாஸ்டரில் விரிசல்கள் காணப்பட்ட போதிலும், குறித்த கட்டிடத்தை திருத்தம் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | விரைவில் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2018 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 11 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட மிகைக் கட்டணச் சான்றிதழ்கள் மூலம் அறவிடப்பட்ட ரூபா 168,000 தொகை, சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் 06 மாதங்கள் முதல் 06 ஆண்டுகள் வரை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | அதை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | சபை நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில், 70.86 x .85 x .125 மீட்டர் அளவிலான கொங்கிரீட் வடிகால் நிர்மாணத்திற்காக சபை நிதியிலிருந்து ஒரு ஒப்பந்ததாரருக்கு ரூபா . 1,490,194 செலுத்தப்பட்டது, ஆனால் 2025 ஏப்ரல் 01 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது, நிறைவேற்றப்படாத இரண்டு பகுதிகளுக்கு ரூபா. 128,060 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை அறவிடப்படும் என்பதாக. | .பொறுப்பான தரப்பினரிடமிருந்து அதை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும. |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 14 பதவிகளில் 29 வெற்றிடங்களும் 05 பதவிகளில் 15 மிகைகளும் காணப்பட்டன. | பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்காக எழுத்துமூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இடமாற்றம் பெற்றுச் சென்ற, சேவையை வரிதாக்கிச் சென்ற 13 உத்தியோகத்தர்களிடமிருந்து 1 வருடம் முதல் 19 வருட காலவீச்சில் நிலுவையாக காணப்படும் ஊழியர் கடன் மீதிகள் ரூபா 359,735 தொகை சபையால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கடன் மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |